Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத வரு கார்த்திகை மீ 12 உ புதன்கிழமை (28 11 1990) UTHAYAN—A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 2

மாங்குளம் இழப்புகளினால் அரசுக்குப் பெரும் நெருக்கடி!

நிலை குறித்து ஆராய நேற்றிரவு அவசர அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, நவம்பர் 28

மாங்குளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகளிடம் பறி கொடுத்ததை அடுத்து ஸ்ரீலங்கா அரசு வட்டாரங்களில் பெரும் நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இதனையடுத்து நிலைமையை ஆராய்வதற்காக அமைச்சரவை நேற்றிரவு அவசர அவசரமாகக் கூடவிருந்தது.

மாங்குளம் இராணுவ முகாமைக் கூண்டோடு இழந்த சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்கள்; அரச தலைமைப்பீடம் மற்றும் எதிர் கட்சிகள் ஆகியவற்றிலேயேயும் தென்பகுதி மக்களிடையேயும் பெரும் அதிருப்தியையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே இந்த நிலையைச் சமாளிப்பதற்கும், உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். கோட்டைக்குள் செல்ல பொதுமக்களுக்கு அனுமதி

மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்று பொதுமக்கள் யாழ். கோட்டைக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனை அடுத்து நேற்றுக் காலை முதல் பொதுமக்கள் கோட்டைப் பகுதியை நோக்கிப் படையெடுத்தனர்.

சிறுவர்கள், வயோதிபர்கள் பெண்கள் என பெரும் எண்ணிக்கையானோர் பல்வேறு இடங்களிலிருந்தும் நேற்று இரவு வரை கோட்டையைப் பார்வையிட ஆவலுடன் அங்கு குழுமினர்.

இதனை அடுத்து முனீஸ்வரன் வீதிப்பகுதியில் திடீர்ப் பெட்டிக்கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. (ஒ 6)

துணுக்காய்ப் பகுதியில் கடும் விமானத் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 28

துணுக்காய்ப் பகுதியில் நேற்று கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விரிவான தகவல்கள் ஏதும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை (உ)

மாவீரர் வார இறுதிநாள் குடாநாட்டில் அனுஷ்டிப்பு

மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்று யாழ். குடாநாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாவீரர் நினைவாக இரத்ததான நிகழ்ச்சியும் நடைபெற்றது.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த 21 பேர் நேற்று யாழ் போதனா ஆஸ்பத்திரியில் இரத்ததானம் செய்தனர்.

சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மரநடுகை வைபவங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டினர்.

இதேவேளை பல முக்கிய இடங்களிலும் மாவீரர் நினைவாக கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெற்றன.

பல இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாவீரர்களின் பெற்றோர்கள், விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர். (ஒ-6-5-51)

பல்வேறு இடங்களில் கொடி இறக்கும் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் தினத்தை முன்னிட்டு கடந்த 21ஆம் திகதி பல இடங்களிலும் ஏற்றி வைக்கப்பட்ட தமிழீழக் கொடிகள் நேற்று மாலை 7 மணியளவில் உம்பிரதாயபூர்வமாக இறக்கப்பட்டன.

நகரிலும், நகருக்கு வெளியேயும், அரச திணைக்களங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களிலும் கொடி இறக்கும் வைபவங்கள் இடம் பெற்றன: (உ-5)

வளைகுடா நெருக்கடி:

நிரந்தர உறுப்பு நாடுகள் படை எடுப்புக்கு இணக்கம்

ஐ. நா., நவ 28

ஈராக் மீது யுத்தம் ஒன்றை பிரகடனம் செய்வது குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் விரிவான இணக்கம் ஒன்றைக் கண்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

நாளை வியாழக்கிழமை நடைபெறும் ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேறுவதற்காக இறுதிக் காலக்கெடுவுக்கான திகதி நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் நாளை அமெரிக்கா கொண்டு வர உள்ள தீர்மானத்தில், "1-1-1991 க்கு முதல் ஈராக் தனது படைகளை குவைத்தில் இருந்து விலக்கிக்கொள்ள வேண்டும் இல்லையேல் 2-1-19[illegible] யுத்தம் ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்" –

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிக்கொடியே தேசியக்கொடி; மாவீரர் நாளே தேசிய தினம்

மானிப்பாய் கூட்டத்தில் யோகி அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

எமது பாரம்பரிய பிரதேசத்தை மீட்டுத் தமிழீழம் அமைக்கும்வரை, எமது தேசியக்கொடியாகப் புலிக்கொடியையும், தேசியநாளாக நவம்பர் 27ஆம் திகதியையும் பிரகடனம் செய்துள்ளோம்;

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி மேற்கண்ட தகவலை வெளியிட்டார்

நேற்றுமாலை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாவீரர்வார இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்:

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சியில், வீரமரணமடைந்த மாவீரர்களுக்காக ஆரம்பத்தில் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது; வீரமரணமடைந்த போராளிகளின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

திரு. யோகி நிகழ்ச்சியில் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழர்கள் பிரதேச, சாதி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

காஷ்மீரில் உஷார்

இஸ்லாமாபாத், நவ. 28

காஷ்மீர் எல்லையில் உள்ள தனது படையினரை உஷார் நிலையில் இருக்குமாறுபாகிஸ்தான்பிரதமர் ஜனாப் நவாஸ் ஷெரிப் நேற்று உத்தரவிட்டார்

எந்த நேரமும் யுத்தத்துக்கு ஆயத்தமாக இருக்குமாறு அவர் தனது படைகளைக் கேட்டிருக்கிறார் (அ)

கப்பல் பொருள் இறக்கும் வேலை துரிதம்

யாழ்ப்பாணம், நவ 28

கடும் மழை காரணமாக பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் சில தினங்களாகத் தடைப்பட்டிருந்தன.

எனினும் நேற்று ஓரளவு மழை குறைந்திருந்ததால் பொருள்களை இறக்கும் [illegible] பெற்றன. (உ-7)

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

பாலகுமாரனும் நேற்றைய மாவீரர் தினக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், நவ 28

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற மாவீரர் தினக் கூட்டத்தில் திரு. வே. பாலகுமாரனும் கலந்து கொண்டார்.

விடுதலைப் புலிகளுடன் ஈரோஸ் இணைந்த பின்னர் நேற்றே திரு பாலகுமாரன் பங்கேற்கக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

"தமிழ் மக்களின் விடிவில் அக்கறை கொண்டு ஈரோஸ் எம்முடன் இணைந்து போராட முன்வந்தமை வரலாற்று முக்கியத்துவ நிகழ்வாகும்" – என்று இந்தக் கூட்டத்தில் திரு. யோகி பேசும் போது குறிப்பிட்டார்

மண் மீட்புப் பணியில் போராடி வீரமரணமடைந்த ஈரோஸ் போராளிகளும் மாவீரர் பட்டியலில் இடம் பெறுவர் என்றும் திரு. யோகி தெரிவித்தார்: (ஒ-3-5)

மானிப்பாயில் நேற்று ஹெலி, சீ-பிளேன் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 28

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் ஹெலி ஒன்று மானிப்பாய்ப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டு சரமாரியான தாக்குதலை நடத்தியது.

இதேவேளை நேற்று மாலை 6 30 மணிக்கு சீ-பிளேன் ஒன்று பல தடவை மானிப்பாய் பகுதியைச்சுற்றி வட்டமிட்டு, திடீரென கலிபர் தாக்குதலை நடத்தியது (ஒ-5)

முல்லைத்தீவு நகருக்குள் செல்ல அரச அதிகாரிகளுக்கு அனுமதி

முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் வங்கி அலுவலகங்களைப் பார்வையிட அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

நகரப் பகுதிகளிலேயே பெரும்பான்மையான அரச அலுவலகங்கள் இயங்கி வந்தன.

அந்த அலுவலகங்கள் ஆவணங்களை எடுக்க முடியாத நிலையில் நகருக்கு வெளியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றன.

பிரஸ்தாப அலுவலகங்களைச் சேர்ந்தவர்கள் முக்கிய ஆவணங்களை எடுத்துச் செல்ல வசதியாக இந்த அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும். திறந்த முறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் நிலைய பிரதான வீதி, மானிப்பாய். (C/5398

"சாயி ரைப்பிங் சென்ரர்"

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்கள் 1 - 12 - 90 இல் ஆரம்பம். மதியம் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலை களும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- சாயி ரைப்பிங் சென்ரர். நுணாவில் சந்தி சாவகச்சேரி (14839)

சேவை

காலை 7 மணி முதல் 5 மணி வரை போட்டோ ஸ்ரட் (A4 ஒரு பக்கம் ரூபா 5/- மட்டுமே) றோனியோ வேலைகள் அனைத்தும் உடனுக்குடன் செய்து கொள்ள சண்முகம் றேட்ஸ், 65, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (14738)

லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

சோற்றி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பிளான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமதுவாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம் (சி/5402)

வகுப்புக்கள்

புதிய கல்வி நிலைய செங்காதரன் ஆஸ்பத்திரியடி] வகுப்புக்கள் ஆண்டு4 ஆண்டு5 217 நாவலர் வீதி, (யுப்பிற்றர் வீடியோ சென்ரர் முன்பாக) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளன. பிரபல பாடசாலைகளுக்கான அனுமதிப்பரீட்சைக்கேற்ப ஆங்கிலம், தமிழ் கணிதம் நடத்தப்படும். ஆரம்பம்;- 31 - 11 - 90 வெள்ளி 3 மணி. (14956)

"இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு "முடிவல்ல ஆரம்பம்" நாவலாசிரியர் சிகரம் திருச்செந்திநாதன் எழுதியது 146 பக்கங்கள் 45/- ரூபா புதிய அனுபவத்தினை தருகிறது இந்நாவல் துர்கா ஸ்ரோரசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணித சாவகச்சேரி, ஸ்ரீராந் புத்தக சாலை நல்லூர். (14952)

வகுப்புக்கள்

பிரத்தியேக வகுப்புக்கள் [Indiuidual Classes] G C E (A/L. பௌதிகவியல் தூயகணிதம்; பிரயோககணிதம். A/L வகுப்புக்களில் பல வருடங்கள் கற்பித்து வரும் ஆசிரியரினால் நடாத்தப்படும் நூலக வசதியுண்டு பாலசுந்தர் B.sc (Cey) 37/1 பிறவுண்வீதி யாழ்ப்பாணம். (14954)

German Language

ஜேர்மனியில் பட்டப் படிப்புக்களை தொடர்வதற்காக நடத்தப்படும் இடை நிறுத்தப்பட்ட வகுப்புகளும் புதிய வகுப்புகளும் 3 - 12 - 90 இல் ஆரம்பமாகின்றன. தொடர்பு: சபாநாயகம் German Cultural Assciation 33, கண்டிவீதி யாழ்ப்பாணம். (14960)

அளவெட்டியில் தீர்த்த விழா

அளவெட்டி தெற்கு. நரசேஸ்வரம் ஸ்ரீ நாகலிங்க நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று 28 ஆம் திகதி ஏகாதசித் தீர்த்த விழா நடைபெறும். இன்று காலை 10 மணி தொடக்கம் விசேஷ அபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதியுலா எழுந்தருளி தீர்த்தமாடச் செல்வாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

காலதாமத அழைப்பு

வடக்கில் இருந்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு (1991 ஆம் கல்வியாண்டிலே) பயிற்சி பெற விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் காலம் தாழ்த்தி வந்து சேர்ந்துள்ளன (ஐ-6)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
விற்ரோறியா
தேவசகாயம்பிள்ளை

மறைவு: 29-10-90

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்

இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 29-11-90 வியாழக்கிழமை காலை 6 30 மணிக்கு கருவில் புனித அன்னை மரி ஆலயத்தில் ஒப்பு கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு பற்றி அன்னாரது ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடுமாறு வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரி,
பெறாமக்கள்,
உற்றார்,
உறவினர்.

அரம்பொன் செற்கு.
ஊர்காவற்றுறை
(14957)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இராஜசேகரம்
அகஸ்ரீன்
செல்வராசா

பிறப்பு; 31 - 12 - 1951

இறப்பு: 29 - 11 - 1988

சிலுவத்தில்
நேசித்தவர்களே
மரணத்திலும்
மறவாதீர்கள்

இன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 29 - 11 - 90 வியாழக் கிழமை காலை 7.00 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் திருப்பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:

குடும்பத்தினர்
(14961)

தாய்மாருக்கு 'பாம்போஷா'

யாழ்ப்பாணம் நவ. 28 கர்ப்பிணித் தாய்மாருக்கும், குழந்தைகளுக்கும் திரிபோஷாவுக்கு பதிலாக, பனம் பொருளில் இருந்து தயார் செய்யப்பட்ட 'பாம்போஷா' வழங்க ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

சுமார் சில மாதங்களாக கொழும்பில் இருந்து திரிபோஷா சத்துணவு அனுப்பப்படாததை கருத்தில் கொண்டு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (ஒ 3)

மானிப்பாய் இலங்கை வங்கி ஒய்வூதியம்

மானிப்பாய், நவ 28 மானிப்பாய், இலங்கை வங்கிக்கிளையில் ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தற்போது அமுலில் உள்ள ஊரடங்கு நீக்கப்பட்ட பற நாளே ஒய்வூதியர்களை வவுச்சருடன் வங்கியில் சமுகம் அளிக்கும்படி வங்கி முகாமையாளர் திரு. சி என் நவரத்தினராஜா கேட்டுள்ளார். முதல் வருபவருக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒய்வூதியம் வழங்கப்படும். (இ)

முஸ்லிம் மாநாடு தீர்மானம்

கொழும்பு, நவ 28 வடக்கு கிழக்கு தற்கால இணைப்பை நீக்கி, கிழக்கு மாகாணசபைக்கு என தனி மாகாணசபையை அமைக்க வேண்டும்

இப்படி கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த முஸ்லிம் அமைப்புகளின் மாநாட்டில் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது

சபாநாயகர் எம் எச். முஹம்மது இம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

வடக்கு-கிழக்கு இணைப்பு பற்றிய விஷயத்தில் முஸ்லிம் அமைப்புக்களின் ஒருமித்த கருத்தைத் திரட்டுவதற்காக இம்மாநாடு கூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

ரூபா 20 கோடி

அரசாங்கம் ஆரம்பித்துள்ள தேசியபாதுகாப்பு நிதிக்கு சேர்ந்துள்ள பணம் 20 கோடி 10 லட்சம் ரூபாவைத்தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது (இ எ)

Tender Notice

Private Security Service

University of Jaffna

University of Jaffna invites sealed tenders from Private Security Agencies who are registered with the Ministry of Civil Security to handle the Security Service at Faculty of Agriculture, Kilinochchi

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna before 12 00 noon on 1990-12-05 on production of receipt from Bursar. University of Jaffna for payment of non-refundable deposit Rs. 250/- and refundable deposit Rs. 2500/-

Tenderer should be prepared to employ minimum three staff including on Inspector for each eight hour shift.

Perfected tender forms to be sent to reach Registrar, University of Jaffna o. or before 1990-12-07 at 10 00 a.m.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

- REGISTRAR.
University of Jaffna.
Thirunelvely,
Jaffna.
1990-11-27.

[C-5462]

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 | 04 | 1964

உதிர்வு: 09 | 12 | 1989

திதி: 28 - 11 - 1990

திரு. தங்கவேலாயுதம் நேமிநாதன்
(ரகு)

என் அன்புத் தெய்வமே! ஆண்மையின் சிகரமே பாசத்தின் உறைவிடமே. பண்பின் ஒளிவிளக்கே ஆண்டு ஒன்று ஆயினும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த நாட்கள் எம் நெஞ்சை விட்டு அகலாதவையா. என் ஆருயிரே நீங்கள் இல்லாத என் வாழ்வு மதியிழந்த வானம் போல் காட்சியளிக்கின்றதே. ஓராண்டு என் கண்ணீர் ஆறாக உருகி ஓடுகிறதே உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்மும் இறைவனை வேண்டுகிறோம்

உங்கள் அன்பு
மனைவி, மகள்.
(ரதி) (கஜனா)

குச்சன் லேன்,
வல்வெட்டித்துறை.
(14843)

வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1991

நெடுந்தீவு பிரதேசசபை, நெடுந்தீவு

1991 ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதன் பேரில் எனினால் 14 - 12 - 90 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொன்றிற்குமான விண்ணப்பங்கள் அவற்றிற்கான பதிவுக் கட்டணத்துடன் தனித்தனியே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை தபாலில் அனுப்புவோர் பதிவுக் கட்டணத்தை காசோலையாகவோ அல்லது கூப்புக் கட்டளையாகவோ "விசேட ஆணையாளர், நெடுந்தீவு பிரதேசசபை" என்ற பெயரில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொருட்கள் / சேவைகள்	பதிவுக்கட்டணம்
1. காகிதாதிகள் / அச்சிட்ட படிவங்கள் வழங்கல்	— 50.00
2 சுகாதார சேவைக்கான பொருட்கள்	— 25.00
3 வாகன தகடு தயாரித்து வழங்கல்	— 25.00
4. சீருடை துணிகள், சப்பாத்து வழங்கல்	— 50.00
5 புத்தகங்கள் கட்டுதல்	— 25.00
6 தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் வழங்கல்	— 50.00
7 நீர் விநியோக உபகரணங்கள் வழங்கல்	— 50.00
8. வாகன மூலம் பொருட்களை ஏற்றியிறக்கல்	— 50.00

அ. க. இராசதுரை,
விசேட ஆணையாளர்.

நெடுந்தீவு பிரதேசசபை,
நெடுந்தீவு,
27 - 11 - 90

[சி/5463]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28/11/1990

முல்லைத்தீவு - கிளிநொச்சியில் நடமாடும் சுகாதாரச் சேவை

டிசம்பர் முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 28

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள பின் தங்கிய பகுதி மக்களுக்கு சுகாதார வசதிகள் அளிக்கும் வகையில் நடமாடும் சுகாதார நிலையம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இயங்கவிருக்கிறது.

இந்த இரு மாவட்டங்களிலும் வைத்தியசாலைகள் இயங்காத குடிகளில் உள்ள பின் தங்கிய மக்களுக்கு சுகாதார வசதிகள் அழிக்கவே இந்த நடமாடும் சேவை ஆரம்பிக்கப்படுகிறது. யாழ். செஞ்சிலுவைச் சங்கம் இந்த சேவையை ஏற்பாடு செய்துள்ளது.

தொற்றுநோய்த் தடுப்பூசி ஏற்றுதல், தாய்-சேய் நலன் பேணல் உட்பட அடிப்படை வசதிகளை இந்தச் சேவை வழங்கும்.

கிளிநொச்சியில்

நடமாடும் சுகாதாரசேவை கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில், தாச்சிக்குடா வில் – திங்கட்கிழமைகளிலும் வேரவிலில் செவ்வாய்க்கிழமைகளிலும் இரணைமடுவில் புதன்யாழிகிழமைகளிலும் கட்டக்கச்சியில் வெள்ளிக் கிழமைகளிலும் இராமநாதபுரத்தில் சனிகிழமைகளிலும் இடம்பெறும்.

முல்லைத்தீவில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, முள்ளிவளை ஆகிய பகுதிகளில் திங்கட்கிழமைகளிலும் இரணைப்பாலம் அலம்பில் பகுதிகளில் செவ்வாய்க்கிழமைகளிலும் உடையார் கட்டு, நாயாறு, கொக்குத் தொடுவாய் ஆகிய பகுதிகளில் புதன்கிழமைகளிலும், விஸ்வமடு, முள்ளிவளை பகுதிகளில் – வியாழக்கிழமைகளிலும், முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் – வெள்ளிக்கிழமைகளிலும், புதுக்குடியிருப்பு குமுழமுனைப்பகுதிகளில் – சனிக்கிழமைகளிலும் நடமாடும் சுகாதாரச் சேவை இடம் பெறும்.

இந்த நடமாடும் சேவையில் மூன்றுவைத்திய அதிகாரிகளும், மூன்று சுகாதாரப் போதனாசிரியர்களும் மூன்று தாதிகளும் கடமையாற்றுவார்கள். (இ – 3 – 6)

5,000 தொண்டர் ஆசிரியரிடம் போலிச் சான்றிதழ்கள்

கொழும்பு. நவ. 28

நிரந்தர ஆசிரிய நியமனம் கோரி விண்ணப்பித்துள்ள தொண்டர் ஆசிரியர்களின் சுமார் ஐயாயிரம் பேர் போலிச் சான்றிதழ்களை கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளனராம்.

இப்படி ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் கூறப்பட்டிருப்பதாக கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ)

தமிழ் அரசியல் கட்சிகளுடன் இந்தியத் தூதர் சந்திப்பு

கொழும்பு. நவ 28

ஆறு தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். எம். ஜா கடந்த திங்கட்கிழமை பிற்பகல் பேச்சுகள் நடத்தினார்.

இந்தியத் தூதரின் அழைப்பின் பேரில் இச்சந்திப்பு கொழும்பு இந்தியத் தூதரகத்தில் இடம் பெற்றது

வடக்கு – கிழக்கு மாகாண இணைப்பு பற்றி முஸ்லிம் அமைப்புக்களுடன் காணப்படும் உடன்பாடு பற்றி தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தியத் தூதரிடம் விரிவாக எடுத்துக் கூறினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

மரணச் செலவுக்கு இதுவரை ரூ. 6 லட்சத்து 40 ஆயிரம்

யாழ்ப்பாணம், நவ 28

யாழ் மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்துக்கு பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மரணமானவர்களுக்கு ஈமக்கிரியைச் செலவுக்காக இதுவரை 6 லட்சத்து 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் தொகையைப் பெற இதுவரை விண்ணப்பித்த 320 பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு விட்டன என்றும் மேலும் விண்ணப்பங்கள் வந்து சேர உதவித் தொகை வழங்கப்படும் என்றும் புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி தெரிவித்தார். (இ-3)

பாதிப்பு

யாழ்ப்பாணம். நவ 28

தொடர்ந்து பெய்யும் மழையினால் பருத்தித்துறையில் தரித்து நிற்கும் "விங்கோ றேட்ஸ்" கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமாவதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-3)

நிவாரணப் பொருள்

கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் தொண்டர்களுக்கு சர்வோதயத்தினால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன. (இ)

எலும்பு முறிவு சிகிச்சை

காலை 9 00 மணி முதல் 12 மணிவரை கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் எலும்பு முறிவுச் சிகிச்சை நடைபெறுகிறது என்று பதில் வைத்திய பொறுப்பதிகாரி செ. பரமசிவம்பிள்ளை தெரிவித்தார்

மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வெளிமாவட்ட மாணவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிவரும் நிவாரண உதவிகள் கொடுக்க வேண்டும்

வெளிமாவட்ட மாணவர்கள் சார்பில் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

அரச நிறுவனங்கள் நிவாரண உதவிகளை வழங்க வெளிமாவட்ட மாணவருக்கு பின் நின்ற வேளையிலே அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்த உதவிக்கு நாம் நன்றி தெரிவிப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-6)

ஓய்வு பெறுவதில் சில ஊழியருக்கு நிபந்தனை

சுயவிருப்பத்தின் பேரில் அரச ஊழியர் ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் பொறுப்பான பதவிகளில் உள்ள அரச அதிகாரிகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி வரை ஓய்வு பெறமுடியாது.

இப்படி பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

1991 பெப்ரவரிக்கு பின்னரே அந்த அரச அதிகாரிகள் இந்தத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

ஏனைய தர அரச ஊழியர்கள் ஒருமாத கால முன்னறிவிப்புடன் ஓய்வு பெற அனுமதிக்கப்படுவர் என்று பொது நிர்வாக அமைச்சு ஏற்கனவே அறிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது (இ-எ)

படையினரின் விமானத் தாக்குதலுக்கு குடிமக்களே பலியாகி வருகின்றனர்

மாங்குளத்திலிருந்து பிரிட்டன் திரும்பியவர் பி. பி. சி. க்குப் பேட்டி

மாங்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் இயக்கம் தாக்குதலை ஆரம்பித்த சமயம் அப்பகுதியில் பிரிட்டிஷ் பிரசை ஒருவர் இருந்தார். அவரின் பெயர் திரு. ரெட்மான். கிறிஸ்தவ உதவி நிறுவனம் ஒன்றின் தொண்டராக அவர் இலங்கையில் பணிபுரிந்து வந்தார்.

கடந்த திங்கள் பிரிட்டன் திரும்பிய திரு. ரெட்மான் பி. பி. சி. வானொலிக்கும் பேட்டி அளித்தார்.

அந்தப்பேட்டி நேற்றுக் காலை 10 40 மணிக்கு பி.பி.சி. வானொலியின் 'வேர்ல்ட்ருடே' நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: மாங்குளம் இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் பற்றி...

பதில்: அதிகாலை ஒரு மணியளவில் இருந்து விடுதலைப் புலிகள் இராணுவ முகாம் நோக்கிச் செல்வதைக் கண்டேன்.

டிரக்குகளிலும் புலிகள் போராளிகள் மாங்குளம் நோக்கி பெரும் எண்ணிக்கையில் சென்றனர். அவர்களின் இராணுவ கொமாண்டர்களின் தகவலின்படி மாவீரர்கள் வாரத்தை ஒட்டி விடுதலைப் புலிகள் போராளிகள் இராணுவ முகாம் ஒன்றின் மீது பெரிய தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக அறிந்தேன்.

கேள்வி: விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் தமிழர்களின் நிலை பற்றி...

பதில்: தமிழர்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்து வருகின்றனர் தங்களின் பாதுகாப்பு விடுதலைப் புலிகளின் கைகளில் இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். அரசுப் படைகளின் தாக்குதலை முறியடிக்கக்கூடிய நிலையில் விடுதலைப் புலிகள் உள்ளனர் என்பது தமிழர்களின் அபிப்பிராயமாக உள்ளது.

தாக்குப் பிடிப்பர்

அரசு விமானப் படையின் கண்மூடித்தனமான விமானத் தாக்குதலுக்கு குடிமக்கள்தான் பலியாகின்றனர். பாதிக்கப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதலுக்கு நின்று பிடிக்கக்கூடியதான பதுங்கு குழிகளை (பங்கர்களை) ரயில் சிலிப்பர் கட்டைகள் மற்றும் தண்டவாளங்களைக் கொண்டு அமைத்துள்ளனர்.

விமானக்குண்டு வீச்சுக்கு குடிமக்கள் பாதிக்கப்படுவது பற்றி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர் விவரங்களைப் பார்த்தால் தெரியும்

கேள்வி; விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் கீழ் மக்கள் வாழ்க்கை எப்படி போகிறது:

பொருளாதார முற்றுகை

பதில்: விமானக் குண்டு வீச்சுக்கு உட்படாத பகுதிகளில் மக்கள் ஓரளவு வசதியாக வாழ்கின்றனர்.

அரசு பொருளாதார முற்றுகையை தமிழ்ப்பகுதிகளில் அமுல் நடத்தி வருகிறது. அரிபொருள், மின்சாரம் தமிழ்ப்பகுதிகளுக்குக் கிடைப்பது தடை செய்யப்பட்டுள்ளது

டீசல் இன்மையால் வடபகுதியில் விவசாய முயற்சி பாதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளுக்கே டீசல் 75 லீற்றர் என்ற அளவில் தான் வழங்கப்படுகிறது.

கேள்வி:- இனப்பிரச்சினைகளு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படும் சாத்தியக் கூறு இருக்கிறதா?

பதில்:- பேச்சுக்கள் இருதரப்பாருக்கும் இடையில் லண்டனில் நடைபெறுவதாக வதந்திகள் வந்தன.

அவற்றை இலங்கையில் இருதரப்பினரும் மறுத்துவிட்டனர்.

நான், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகியைச் சந்தித்து பேசினேன்.

ஒற்றையாட்சி அரசமைப்பைக் கிழித்தெறிந்தால் ஒழிய. பேச்சுக்களுக்கான சாத்தியமே இல்லை என்று திரு.யோகி என்னிடம் சொன்னார்.

மாகாணசபை முறை எல்லாம் இனி ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது ஒன்றல்ல என்பது அவர் கருத்து

(இ – எ)

தலையங்கம்

விளக்குப் பொறி

புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இளைப்பாறவிரும்பும் அரச ஊழியர்கள் இம்மாதம் மூடிவகற்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்று அரசு அவசரப்படுத்தி உள்ளது. இளைப்பாறும் வயதை எட்டுவதற்கு முன்னரே. குறைந்த சேவையுள்ள ஊழியர்களும் அரசாங்க சேவையை விட்டு விலகுவதற்கு அனுமதித்து அதற்குப் பல சலுகைகளை வழங்கும் புதிய ஓய்வூதியத் திட்டம் மன்றுமாதங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டு விட்டது

புதிய ஓய்வூதியத் திட்டம் நீண்ட காலமாக இருந்த அரசாங்க சேவைக்குரிய ஒழுங்குகளுக்கு முற்றிலும் மாறுபட்டது அரசியல் ஆதாயம் கோரும் நோக்கம் கொண்டது. அதிலும் அரச சேவையில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்து விடும் என்ற சூழ்ச்சியுடன் கூடியது

தென்னிலங்கையில் தீவிரவாதம் மீண்டும் தலையெடுத்து வருகிறது. அரசின் சீர்திருத்த பொருளாதாரக் கொள்கைகளால், அங்கு இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி இருக்கிறார்கள் அவர்களின் விரக்தி எல்லை மீறாமல் தடுக்க. அவர்களுக்கு அரச சேவையில் வாய்ப்பளிப்பது அதன் மூலம் அரசாங்கக் கட்சியின் வாக்கு வங்கியை வளம்படுத்திக் கொள்வது. சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறுதல் என்ற சீனி தடவிய நச்சு வில்லையைக் காட்டி, அரசாங்க சேவையில் உள்ள தமிழர்களையே அதிகளவில் இளைப்பாற வைத்து. இனவிகிதாசாரப்படி நியமனம் என்ற போர்வையில், தமிழ் அரச ஊழியர் எண்ணிக்கையைக் குறைத்துவிடுதல்- இவையே புதிய சலுகைத் திட்டத்தின் நோக்கங்கள்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், தமிழ்ப் பகுதிகளில் பாதுகாப்பு கேள்விக் குறியாகமாறிய ஒரு நிலையில், வெளிமாகாணங்களில் பணிபுரியும் தமிழருக்கு எப்போதும் எதுவும் நடக்கலாம் என்ற மன நெருக்கடியுடன் கூடிய பிழைப்பு என்றாகி விட்ட பின்னணியில், சலுகை ஒய்வூதியத் திட்டம் அறிவிக்கப்பட்டது சூழ்ச்சி மிகுந்த நோக்கத்துடன் தான் என்பதில் ஐயமில்லை

இன்றைய நெருக்கடியான கட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையான விட்டில் பூச்சிகளை (தமிழ் அரச ஊழியரை) விளக்குப் பொறிக்குள் விழுத்தலாம் என்று சரியாகக் கணக்குப் போட்டுத்தான் புதிய ஓய்வூதியச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன!

ஏற்கனவே விளம்பரப்படுத்திய, அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் பரீட்சைகள் கடந்த 23, 24 ஆம் திகதிகளில் ஏழு மாகாணங்களிலும் நடந்துவிட்டன. வடக்கு-கிழக்கு விண்ணப்பத்தாரர்களைப் பற்றி எள்ளளவு அக்கறையும் கொள்ளப்படவில்லை விசேட பரீட்சை நடத்தப்படுமா இல்லையா என்பது குறித்துத் தானும் இதுவரை உத்தியோக பூர்வ அறிவிப்பும் இல்லை.

இந்த லட்சணத்தில், ஓய்வுபெறும் தமிழ் ஊழியர்களின் இடங்களுக்கு சிங்களவர் அன்றித் தமிழ் இளைஞர்களே நியமிக்கப்படுவார்கள் என்று உத்தரவாதம் ஏது? அனுபவம் மிக்க தமிழ் அரச ஊழியர்களை புதிய ஓய்வூதியத் திட்டம் என்ற பொறியில் வீழ்த்தி விட்டு, அந்த இடங்களுக்குச் சிங்கள இளைஞர்களை நியமித்தாலும் ஆச்சரியப்படவே தற்கில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் -4 28/11/1990

குவைத் விவகாரம்:

ஈராக்கை கடுமையாக எச்சரிக்கிறார் கோர்பச்சேவ்

மாஸ்கோ, நவ. 28

குவைத்தில் இருந்து உடனடியாக வெளியேறி மோசமான விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளும்படி சோவியத் யூனியன், ஈராக் அரசாங்கத்தைக் கடுமையாக எச்சரித்துள்ளது

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸை மாஸ்கோவுக்கு அழைத்து, இந்த எச்சரிக்கையை ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் அவரிடம் தெரிவித்தார்.

குவைத்தை ஈராக்கின் பிரதேசம் என்று நியாயம் தெரிந்த எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றும்-

ஆகவே மறுபேச்சின்றி குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேறி விட வேண்டும் என்றும்-

தவறின் அதனால் ஏற்படும் மோசமான விளைவுகளை எதிர் கொள்ளத்தயாராக இருக்கும் படியும்- ஈராக் வெளியுறவு அமைச்சரை, ஜனாதிபதி கோர்ப்பச்சேவ் கடுமையாக எச்சரித்தார். (ஒ-எ)

ஈராக்கின் பக்கம் லிபியா

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமானால் ஈராக்குக்குத் தாம் உதவி செய்யப்போவதாக லிபியா அறிவித்திருக்கிறது.

உலைகுடாவிவகாரம் அரபு நாடுகள் சம்பந்தப்பட்டது என்றும்-

இதில்மேலைநாடுகள் தலையிடுவதைத் தாம் விரும்பவில்லை என்றும் லிபியா தெரிவித்திருக்கிறது. (ஒ-எ)

கண்ணீர் அஞ்சலி

ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும், யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச முன்னாள் தலைவருமாகிய அமரர்

சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்கட்கு

எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி

ஆலமரமென நீ இருந்தாய்
ஆச்சமின்றி எம் சங்கங்களை வளர்த்தோம்
காலமெல்லாம் இவ்வளர்ச்சிக்கே உழைத்தாய்
கண்மூடிவிழிக்கு முன் கனவாகி விட்டாய்
மாய வாழ்வு என்பதை நாம் எண்ணவில்லை
மலைத்து நிற்கின்றோம் உம் மறைவினாலே!

அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உரும்பராய் கற்பக விநாயகர்
மகளிர் சி. க கூ. சங்கம்.

(14962)

மரண அறிவித்தல்கள்

சின்னம்மா தாமோதரம்பிள்ளை

தம்மளை அளவெட்டியைச் சேர்ந்த சின்னம்மா தாமோதரம்பிள்ளை 27-11-90 நேற்று காலமாகிவிட்டார். அன்னார்காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (ஓவசியர் பண்டாரவளை) அவர்களின் அன்புமனைவியும், திரு. ஆ. வேலுப்பிள்ளை (ஆசிரியர்), காலஞ்சென்ற திருமதி வி. அன்னபூரணியின் சகோதரியும், யோகசுந்தரம் (ப.நோ.கூ. சங்கம், அளவெட்டி), சீதாலட்சுமி, சிவபாதசுந்தரம் (Dubai), சிவஞானசுந்தரம் (Oman), மோகனசுந்தரம் (Norway) ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகநாயகி, பாலசுப்பிரமணியம் (Income Tax Dept , Colombo), ஜெயதேவி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், கவிதா, செந்திரூபன், தயாளன் (London), அரவிந்தன், வசுமதி, மயூரன், கமலா, சுவர்ணா ஆகியோரின் பேத்தியும், விசுவலிங்கத்தின் மைத்துனியும், தர்மலிங்கம், காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-11-90 இன்று காலை 10 மணிக்கு அன்னாரின் சொந்த இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்தில தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
தா. யோகசுந்தரம்

[14963]

திருமதி சின்னம்மா முத்துத்தம்பி

திருமதி சின்னமமா முத்துத்தம்பி காலமானார். இவர் காலம்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், அமிர்தலிங்கம், திருப்பதிப்பிள்ளை ஆகியோரின் தாயாரும், சுகந்தி, பரமானந்தம், சர்வானந்தம், கிருபானந்தம், சாந்தலெட்சுமி, விஜயலெட்சுமி, கோகிலதாஸன், சந்திரதாஸன் ஆகியோரின் பேத்தியும், சுதனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 10-00 மணிக்கு (28-11-90) கோண்டாவில் காரைக்கால மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
மு. அமிர்தலிங்கம்

குமரன் கோட்டம்,
கோண்டாவில்.

(14964)

திரிசாரணருக்கு ஆஸி அழைப்பு

யாழ்ப்பாணம், நவ 28

இந்த ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலக திரிசாரணர் "ஜம்போறி"யில் கலந்து கொள்ளுமாறு யாழ் திரிசாரணர்களுக்கு ஆஸ்திரேலிய சாரணர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

டிசம்பர் 20 ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி வரை ஆஸ்திரேலியாவின் விக்ரோரியா நகரில் உலக திரிசாரணர் ஜம்போறி நடைபெற உள்ளது. (இ-5)

நிரந்தர....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கும் தீர்மானம் ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்ற இருப்பது சரித்திரத்தில் இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

மாங்குளம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆராய்வதற்காகவும் அமைச்சரவை நேற்றிரவு அவசரமாக கூடியிருந்தது.

இதேவேளை—

மாங்குளம் முகாம் பறிபோனது குறித்து - உண்மை நிலையை வெளிப்படுத்தி, விவரமான அறிக்கையை அரசு வெளியிடவேண்டும் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேசமயம்—

மாங்குளம் முகாமிலிருந்து தப்பிச் சென்ற சிப்பாய்களும் மற்றும் அதிகாரிகள் சிலரும் விமானப்படை ஹெலிக்கொப்டர்களினால் மீட்கப்பட்டதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது. [உ-3

புலிக்கொடி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமய வேறுபாடின்றி ஒரே கொடியின் கீழ், ஒரே தலைமையின் கீழ் நின்று போராடுவதை மாவீரர் வார நிகழ்ச்சிகளின் மூலம் எமது மக்கள் உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளனர்.

அதன் அடுத்த கட்டமாக எமது மக்களின் பூரண ஆதரவுடன், பங்களிப்புடன் தொடர்ந்து போராடி மண் மீட்கப்படும். அதற்கு உறுதியெடுக்கச் சகல தரப்பினரும் முன்வரவேண்டும்.

கடந்த காலங்களில் தலைவர்கள் என்று வழிகாட்டியவர்கள், தமிழர் போராட்டத்தை விற்று வியாபாரம் நடத்தினார்கள். நாம் போராட்டத்தை விற்கப்போவதில்லை. இறுதிவரை, தமிழீழம் கிடைக்கும் வரை, தொடர்ந்து போராடவிருக்கிறோம். போராளிகளின் தியாகங்கள் எமக்கு உந்து சக்தியாக உள்ளன. அவர்கள் விட்டுச் சென்ற தமிழீழம் என்னும் கனவை நனவாக்க சகலரும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்-

உலகில் உள்ள விடுதலை இயக்கங்களில் முதன்மை நிலையில் நின்று போராடும் எமது இயக்கத்தை அங்கீகரிக்கவேண்டியகடமை ஒன்று சர்வதேச நாடுகளுக்குண்டு. ஆனால், அவர்கள் அப்படி அங்கீகரிக்காவிட்டாலும் எமது உரிமைப் போராட்டம் தொடரவே செய்யும்

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேச எல்லைகளைப் பாதுகாக்க சகலரும் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்படும். அந்த நிலை ஏற்படும் போது ஆயுதம் ஏந்தத் தயங்க மாட்டோம் என்று சகலரும் இன்றைய தியாகிகளின் [illegible] எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அறைகூவல் விடுத்தார். [அ-3-5]

போராட்ட வரலாற்றில் முதன்மைச் சக்தி புலிகளே!

சின்னபாலா மாணிப்பாயில் பேச்சு

யாழ்ப்பாணம், நவ. 28

"தமிழர் வரலாற்றில் ஆயுதப் போராட்டம் பல்வேறு பரிமாணங்கள் பெற்றுச் செயற்பட்டது. அவற்றில் முதன்மைச் சக்தியாக, முக்கிய சக்தியாக விடுதலைப் புலிகள் வளர்ந்துள்ளார்கள். இதனை மறுக்க முடியாது. அவர்களின் தொடரும் போராட்டங்களில் நாம் பங்கு கொள்ளத் தயாராகியுள்ளோம்."

முந்திய ஈரோஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினராக விளங்கிய திரு. சின்னபாலா மேற்கண்டவாறு தெரிவித்தார். மாணிப்பாயில் நடந்த மாவீரர் தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

உலகின் மூத்த தலைமுறையில் நெப்போலியன், சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்கள் மாவீரர்களாக மதிக்கப்பட்டனர். அவர்கள் இறந்த பின்னரே கௌரவிக்கப்பட்டார்கள். ஆனால் விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் போராளிகளை மதிக்கும் நிலை இன்று எமது மண்ணில் உருவாகியுள்ளது. —

வீரமரணம் அடைந்தவர்களை மட்டுமன்றி, போராடிக் கொண்டிருக்கும் போதே போராளிகளுக்கு மதிப்பளிக்கும் நிலை போராட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செல்ல உதவும் — என்றும் திரு. சின்னபாலா தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன், வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. சங்கீதன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. அரவிந்தன், வலிகாமம் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி. சித்ரா உட்பட பலர் கூட்டத்தில் உரையாற்றினார்கள். (அ-3-5)

மாவீரர்களின் படங்களும் கண்காட்சியில் பார்வைக்கு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்றுவரும் "தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாறு" புகைப்படக் கண்காட்சியில், நேற்று மாவீரர்களின் புகைப்படங்களும் சேர்க்கப்பட்டன.

கண்காட்சியின் புதிய பிரிவை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி பானு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் திரு. யே. கரட்ணம் யோகி, பேபி சுப்பிரமணியம், தேவர், கவிஞர் புதுவை இரத்தினதுரை, திரு. ராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

புகைப்படக் கண்காட்சியை காண நேற்றும் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.

இன்னிங்ஸ் தோல்வி இலங்கை அணிக்கு!

இலங்கை அணியை இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 8 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இரு அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டி பஞ்சாப் தலைநகர் சண்டிகரில் நேற்று குறிப்பிட்ட ஐந்து தினங்களுக்கு ஒரு நாள் முன்னதாகவே முடிவுற்றது.

நேற்று இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 198 ஓட்டங்களை எடுத்தது.

முதலாவது இன்னிங்ஸில் இலங்கை அணி 82 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது. இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் 288 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

ஆட்டத்தின் சிறந்த வீரராக வெங்கடபதி ராஜு தெரிவானார். அஸாருதீன் தலைமையில் இந்திய அணி பெற்ற முதலாவது டெஸ்ட் வெற்றி இதுவாகும். (ஒ-எ)

மரண அறிவித்தல்கள்

பொன். ஐயம்பிள்ளை

காரைநகர் வலந்தலையை வசிப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் பொன். ஐயம்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் திருமதி பாக்கியம் ஐயம்பிள்ளை (அதிபர்) யின் அன்புக் கணவரும், திருமதி ப. வாசுகி (ஆசிரியை), தேவகிருபாகரன் (ஆசிரியர்), தேவகருணாகரன், தேவபிரபாகரன், கௌரி, தேவகி ஆகியோரின் தகப்பனாரும், பரமநாயகத்தின் (லிகிதர்) மாமனாரும், வரோதயனின் பேரனாரும் ஆவார். தி

அன்னாரின் பூதவுடல் இன்று 28 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
தேவகிருபாகரன்

வலந்தலை,
காரைநகர்.

[14667]

திருமதி வரதராஜக்குருக்கள் ஞானாம்பிகை

சுழிபுரம், குடியிருப்பு சிவஸ்ரீ. சி வரதராஜக் குருக்களின் தர்மபத்தினி ஞானாம்பிகையம்மா காலமாகி விட்டார்.

இறுதிக் கிரியைகள் (28-11-90) இன்று பிற்பகல் நடைபெறும்.

தகவல்:
பிள்ளைகள்

(14668)

இப்பத்திரிகை தீபு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org